# கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தம்

**குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே (1 பேதுரு 1:19).**




மேற்கண்ட வசனத்தில் கூறப்பட்டுள்ளபடி கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தம் சிந்தப்பட்டதாலேயே, இன்று நாம் பாவத்திலிருந்து விடுதலை பெற்றவர்களாய், கிறிஸ்துவில் ஐக்கியம் கொள்கிறவர்களாய், நித்திய வாழ்வைக்குறித்து நிச்சயம் உடையவர்களாய் வாழமுடிகிறது. **யோ 3:16** கூறுகிறபடி **“தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்”**, இங்கு அவரை தந்ததின் நோக்கமே அவருடைய இரத்தம் நமக்காய் ஊற்றப்பட வேண்டும் என்பதற்காகவே.

**எபிரெயர் 9:12** கூறுகிறது **“வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார்”**, என்று. எனவே நித்திய மீட்பாகிய

இரட்சிப்பு நமக்கு கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாகவே வருகிறது. மேலும் **1 யோ 1:7** கூறுகிறது **"அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்"**, என்று. மனுகுலத்திற்காய் சிந்தப்பட்ட விலையேறப்பெற்ற கிறிஸ்துவின் இரத்தத்தை இன்று பிரயோஜனப்படுத்தாதவர்களாய், தங்கள் வாழ்க்கையை பலர் வாழ்ந்து முடித்திருக்கின்றனர். உலகத்தில் உள்ள பணம், பொன் போன்றவற்றை எல்லாம் மதிப்புமிக்கதாக எண்ணி அவற்றை இரவும், பகலும் தேடும் மனிதர்கள், தங்களை தேடி வந்து தன்னுடைய விலையேறப்பெற்ற இரத்ததையே ஊற்றிக் கொடுத்த கிறிஸ்துவை குறித்து அக்கறை அற்றவர்களாய் உள்ளனர்.

**மத்தேயு 26:28** கூறுகிறது **"இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது"**. ஆனால், இன்று உலக மக்களால் அதிகமாய் வீணடிக்கப்படுவது கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தமே ஆகும். மனிதர்கள் தெரிந்தோ, தெரியாமலோ அவருடைய கிரயத்தின் மதிப்பை உணராதவர்களாய், தங்கள் வாழ்வையே வீணடிக்கின்றனர். **1 கொ 6:20** கூறுகிறது **"கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்"**, என்று.

இதில் மேலும் வேதனை தருகிற ஒரு காரியம் **எபிரெயர் 10:29** கூறப்பட்டுள்ளபடி **"தேவனுடைய குமாரனைக் காலின்கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப்பாருங்கள்"**, இங்கு நாம் காண்கிறது அவருடைய பலியின் மேன்மையை அறிந்தும் உணராதவனுடைய முடிவாகும்.

இன்று உலகம் முழுவதும் ஆண்டவர் நமக்காய் இரத்தம் சிந்தின காரியங்கள் நினைவு கூறப்படுகின்றன. மேற்கூறப்பட்டுள்ள வசனங்களின் செய்திகள் பல்வேறு விதங்களில் அறிவிக்கப்படுகின்றன. ஆனால் மனிதர்களின் மனமோ இன்னும் கடினமாகவே உள்ளது. மனிதர்களின் ஞானம் பல்வேறு காரியங்களில் அபரிதமாய் வளர்ந்து இருந்தாலும், கிறிஸ்துவின் இரத்தத்தின் வல்லமையை உணராமல், ஜீவனில்லாதவைகளின் மேலும், மாயையானவைகளின் மேலும் மனிதர்களின் நம்பிக்கை காணப்படுகிறது. இதிலும் கொடுமையானது,

கிறிஸ்துவின் இரத்ததால் கழுவப்பட்டோம் என்று கூறியும், அதன் மேன்மையை உணராதவர்களாய் வாழ்வதாகும்.

எனவே இன்றே நாம் மனந்திரும்புவோமாக, உலகத்தில் உள்ள எந்த ஒரு பொருளை காட்டிலும் விலையேறப்பெற்றது கிறிஸ்துவின் இரத்தமாகும், அதன் மேன்மையை உணர்ந்தவர்கள் ஒருபோதும் பாதை மாறிப்போக மாட்டார்கள். எனவே கிறிஸ்துவை அறிவிக்கும் போது அங்கு முக்கியமாக கூறப்பட வேண்டியது அவருடைய விலையேறப்பெற்ற இரத்தமே ஆகும்.

ஏனெனில் **வெளி** 19:11-13 வசனங்கள் கூறுகிறது **"பின்பு, பரலோகம் திறந்திருக்கக் கண்டேன்; இதோ, ஒரு வெள்ளைக்குதிரை காணப்பட்டது, அதின்மேல் ஏறியிருந்தவர் உண்மையும் சத்தியமுமுள்ளவரென்னப் பட்டவர்; அவர் நீதியாய் நியாயந்தீர்த்து யுத்தம்பண்ணுகிறார். அவருடைய கண்கள் அக்கினிஜுவாலையைப்போலிருந்தன, அவருடைய சிரசின்மேல் அநேக கிரீடங்கள் இருந்தன; அவருக்கேயன்றி வேறொருவருக்குந் தெரியாத ஒரு நாமமும் எழுதியிருந்தது. இரத்தத்தில் தோய்க்கப்பட்ட வஸ்திரத்தைத் தரித்திருந்தார்; அவருடைய நாமம் தேவனுடைய வார்த்தை என்பதே"**. ஆமென், அல்லேலூயா.